வரையறுக்கப்பட்ட சீனோர் மன்றம் - 2024

---

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வரையறுக்கப்பட்ட சீனோர் மன்றத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புகளையும் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்களையும் உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மன்றத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, மன்றம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது மன்றத்தைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மன்றத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் மன்றத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன்

அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி மன்றத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள

எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இயலுமான அளவில் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- மன்றத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- மன்றத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் அதிகாரசபை இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதுடன் தொடர்புடைய கணக்காய்வு அவதானிப்புகள்

1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

	குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(அ)	இலங்கை கணக்கீட்டு நியமம் 01 இன் 54 ஆம் பந்தியில் ஆதன, இயந்திர உபகரணங்கள் மற்றும் முதலீட்டுச் சொத்துகள் ஆகிய விடயங்கள் தனித்தனியாகக் காட்டப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், முதலீட்டுச் சொத்துகளான மத்துமகல காணி, காரைநகர் படகுத் தளம் மற்றும் மட்டக்குளி படகுத் தளம் என்பன ஆதன, இயந்திர உபகரணங்களில் தனித்தனியாகக் காண்பிக்கப் பட்டிருக்கவில்லை.	2025 நிதிக்கூற்றுக்களில் பிரித்துக் காண்பிக்கப்படுவதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.	நியமத்தின் பிரகாரம் ஆதன, இயந்திர உபகரணங்கள் மற்றும் முதலீட்டுச் சொத்துகள் ஆகிய ஆகிய விடயங்கள் தனித்தனியாகக் காண்பிக்கப்பட வேண்டும்.

(ஆ)	இலங்கை கணக்கீட்டு நியமம் 07 இன் 07 ஆம் பிரிவின் பிரகாரம், ஓர் முதலீடு காசு மற்றும் காசிற்குச் சமமானதாகத் தகுதி பெறுவதற்கு அம்முதலீடு எளிதில் காசாக மாற்றப்படக் கூடியதாக இருத்தல் வேண்டும் என்ற போதிலும், 06 மாத முதிர்ச்சிக் காலத்தைக் கொண்டு பேணப்பட்ட ரூபா 23,812,969 பெறுமதியான நிலையான வைப்புத் தொகை காசு மற்றும் காசிற்குச் சமமானதாகக் காண்பிக்கப் பட்டிருந்தது. அதற்கமைய, மீளாய்வாண்டின் காசுப்பாய்ச்சல் கூற்றில் 2024 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான காசு மற்றும் காசிற்குச் சமமானவை அதே தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.	நிலையான வைப்பு வட்டி உயர்மதிப்பாக இருப்பது 06 மாத வைப்புகளுக்கேயாகும். எனவே நிறுவனத்திற்கு உயர் நிதி ஏற்பாடு காணப்படுவதால் அது அவ்வாறே பேணப்பட்டு வருகின்றது.	நியமத்தின் பிரகாரம் காசு மற்றும் காசிற்குச் சமமானவை சரியாக அடையாளம் காணப்பட வேண்டும். ’
(இ)	இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 73 ஆம் பந்தியின் பிரகாரம் ஆதன, இயந்திர உபகரணங்கள் தொடர்பில் பயன்படுத்தப்படும் பெறுமானத்தேய்வுக் கொள்கை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப் பட வேண்டும் என்ற போதிலும், மன்றத்தின் நிதிக்கூற்றுக்களில் பெறுமானத் தேய்வு முறைமை வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.	பெறுமானத் தேய்வு கொள்கையை 2025 நிதிக்கூற்றுக்களில் வெளிப் படுத்துவதற்கு அறிவுறுத்தல் கள் வழங்கப்பட்டுள்ளன.	நியமத்தின் பிரகாரம் ஆதன, இயந்திர உபகரணங்களுக்காகப் பயன்படுத்தப்படும் பெறுமானத்தேய்வுக் கொள்கை வெளிப்படுத்தப்பட வேண்டும்.
(ஈ)	இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 79(ஆ) பந்தியின் பிரகாரம் தொடர்ந்து பயன்பாட்டிலுள்ள, எனினும் முழுமையாகப் பெறுமானத்தேய்வுற்ற சொத்துகளின் நியாயமான பெறுமதி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும் என்ற போதிலும், 2024 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு முழுமையாகப் பெறுமானத் தேய்வுற்றிருந்த ரூபா 111,674,701 பெறுமதியான சொத்துகள் தொடர்பில் நியமத்தின் பிரகாரம் செயற்படப்பட்டிருக்கவில்லை.	சொத்துகளின் நியாயமான பெறுமதியை 2025 நிதிக்கூற்றுக்களில் நியமத்திற்கு இணங்க கையாள்வதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.	நியமத்தின் பிரகாரம் முழுமையாகப் பெறுமானத் தேய்வுற்ற சொத்துகளுக்கு உரிய நியாயமான பெறுமதி வெளிப்படுத்தப்பட வேண்டும்.
(உ)	இலங்கை கணக்கீட்டு நியமம் 20 இன் பிரகாரம் நிதியல்லாத அரசாங்க மானியங்கள், செலவினங்கள் அடையாளம் காணப்படும் காலப்பகுதிகளுக்குள் ஏதேனும் ஒரு முறையான அடிப்படையில் தேய்மானமிடப்பட்டு, அத்தேய்மானக் கொள்கை நிதிக்கூற்றுக்களில்	இலங்கை கணக்கீட்டு நியமம் 20 இன் பிரகாரம் நிதியல்லாத அரசாங்க மானியங்கள் சரியாகத் தேய்மானமாக்கப்பட்டுள்ளன.	நியமத்தின் பிரகாரம் நிதியல்லாத அரசாங்க மானியங்களைத் தேய்மானமாக்கி நிதிக்கூற்றுக்களில் சீராக்கங்களை மேற்கொள்ள வேண்டும்.

	வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் மன்றத்திற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 22,650,000 பெறுமதியான சொத்துகள் அவ்வாறு தேய்மானமிடப்பட்டிருக்கவில்லை.		
(ஊ)	இலங்கை கணக்கீட்டு நியமம் 36 இன் பிரகாரம் காலக்கழிவிற்கு உட்பட்ட சொத்துகளின் இழிவுப் பெறுமதி நிதி நிலைமைக் கூற்றில் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும், ரூபா 1,961,850 ஆன ஸ்ரீ பங்களா படகு குத்தகை வணிகத்திற்குரிய காலக்கழிவிற்கு உட்பட்ட நட்டம் தொடர்பில் அவ்வாறு செயற்படாமல் கிரயத்தில் காண்பிக்கப்பட்டிருந்தது.	நியமம் 36 இன் பிரகாரம் நிதி நிலைமைக் கூற்றில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நியமத்தின் பிரகாரம் காலக்கழிவு நட்டம் சீராக்கப்பட்ட சொத்துக்களின் இழிவுப் பெறுமதி நிதிக்கூற்றில் வெளிப்படுத்தப்பட வேண்டும்.
(எ)	மன்றத்தின் முன்னாள் பொது முகாமையாளர் ஒருவரால் தொழில் நீதிமன்றத்தில் நட்டஈடு கோரித் தொடரப்பட்ட வழக்குத் தொடர்பில் ரூபா 9,400,000 நட்டஈட்டை 2025 ஜுலை 17 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துமாறு தீர்ப்பு வழங்கப் பட்டிருந்ததுடன், தொடர்புடைய பிணை நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படாமையினால் இதுவரை மேல்முறையீடு தாக்கல் செய்யவும் முடியாது போயிருந்தது. இது தொடர்பில் இலங்கை கணக்கீட்டு நியமம் 37 இன் 14 ஆம் பந்தியின் பிரகாரம் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கவில்லை.	இவ்வழக்கு மீண்டும் மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன் இது வரையிலும் திட்டவட்டமாகச் செலுத்துவதற்கான தீர்ப்பு கிடைக்கப்பெறவில்லை. 2025 ஆம் ஆண்டில் மதிப்பீட்டு ஏற்பாடொன்றை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.	நியமத்தின் பிரகாரம் நிகழத்தக்க பொறுப்புகள் தொடர்பிலான ஏற்பாடுகள் சரியாக அடையாளம் காணப்பட வேண்டும்.
(ஏ)	இலங்கை கணக்கீட்டு நியமம் 37 இன் 86 ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவனத்தினால் தொடரப்பட்ட வழக்குகள் மற்றும் நிறுவனத்திற்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்குகள் நிதிக்கூற்றுக்களில் தெளிவாக வெளிப்படுத்தப்பட வேண்டும் என்ற போதிலும், மன்றத்தினால் தொடரப்பட்ட 02 வழக்குகளும் மன்றத்திற்கு எதிராகத் தொடரப்பட்ட 03 வழக்குகளும் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.	இவ்வழக்குகள் அனைத்தும் இது வரையிலும் நீதிமன்றத்தில் விசாரணையிலுள்ள வழக்குகளாகும். 2025 ஆம் ஆண்டு நிதிக் கணக்குகளில் நிறுவனத்தினால் தொடரப்பட்ட வழக்குகள் மற்றும் நிறுவனத்திற்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்குகளை இலங்கை கணக்கீட்டு நியமம் 37 இன் 86 ஆம் பந்தியின் பிரகாரம் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நியமத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படும் திகதியில் இருந்தவாறு நிறுவனத்தி னாலும் நிறுவனத்திற்கு எதிராகவும் தொடரப்பட்ட வழக்குகளின் விபரம் நிதி வெளிப்படுத்தல்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும்.
(ஐ)	இலங்கை கணக்கீட்டு நியமம் 40 இன் பிரகாரம் முதலீட்டுச் சொத்துகள் கிரய மாதிரியின் (Cost Model) படியா அல்லது நியாயப் பெறுமதி மாதிரியின்	முதலீட்டுச் சொத்துகள் கிரய மாதிரியின்படி மதிப்பிடப்பட்டுள்ளதுடன், அம்மாதிரியை 2025	முதலீட்டுச் சொத்துகள் மதிப்பிடப்பட்ட மாதிரி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும்.

	(Fair Value Model) படியாக மதிப்பிடப்பட்டுள்ளன என்பது நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.	நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.	
(ஓ)	இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 15 இன் 31 ஆம் பந்திக்கு முரணாக, 2024 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் வாடிக்கையாளருக்கு ஒப்படைக்கப்பட்டிருக்காத ரூபா 54,893,100 மொத்தப் பெறுமதியான 2024 ஆம் ஆண்டின் 23 விற்பனைப் பற்றுச்சீட்டுகளுடன் தொடர்புடைய பொருட்களுக்காகப் பெற்ற முற்பணத்தை ஒரு பொறுப்பாகக் கணக்கு வைத்திருக்க வேண்டிய போதிலும், 2024 ஆம் ஆண்டின் விற்பனையாகக் கணக்கிடப் பட்டிருந்தது.	அனைத்து உற்பத்திச் செயற்பாடுகளும் பூர்த்தியாகி கட்டளை இட்டிருந்த நிறுவனங்களுக்கு பெற்றுக் கொள்வதற்கு வழிவகை செய்யப்பட்ட போதிலும், அந்நிறுவனங்கள் அவற்றை எடுத்துச் செல்வதில் தாமதம் ஏற்பட்டிருந்தது. கட்டளை களை விநியோகிக்கும் போது விநியோக நெரிசல் காணப்படுவதுடன், சில பொருட்கள் வாடிக்கை யாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.	நிதி அறிக்கையிடல் நியமத்தின் பிரகாரம் தொடர்புடைய விற்பனை வருமானம் சரியாக அடையாளம் காணப்பட வேண்டும்.

1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	வங்கிப் பிணை அட்டவணையின் படி 2017 ஆம் ஆண்டில் காலாவதியான ரூபா 1,383,911 பெறுமதியான வங்கிப் பிணைகள் தொடர்ந்து நடைமுறைச் சொத்துகளாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்ததுடன், காலத்தை நீடிப்பதற்கோ அல்லது காசாக மாற்றிக்கொள்வதற்கோ தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.	வங்கிப் பிணைப் பத்திரங்கள் அனைத்தும் கணக்காய் விற்காக முன்வைக்கப் பட்டுள்ளன. பழைய நிலுவைகள் பணிப்பாளர் சபையில் சமர்ப்பிக்கப்பட்டு நீக்குவதற்கான அறிவுறுத்தல் கள் வழங்கப்பட்டுள்ளன.	காலாவதியான வங்கிப் பிணைப் பெறுமதிகள் சரியான கணக்குகளில் சீராக்கப்பட்டுள்ளன.
(ஆ)	மீளாய்வாண்டில் ஊழியர் பணிக்கொடைக்கான ஏற்பாடு ரூபா 4,095,417 ஆக இருந்ததுடன், அது காசுப்பாய்ச்சல் கூற்றின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் வரிக்கு முன்னரான தேறிய இலாபத்துடன் கூட்டப்பட்டிருக்க வேண்டிய போதிலும் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. 2024 ஆம் ஆண்டிற்குப் பொருத்தமாக இரு அதிகாரிகளுக்குரிய பணிக்கொடை கொடுப்பனவாக ரூபா 578,642 செலுத்தப்பட்டிருந்த போதிலும், பணிக்கொடை கொடுப்பனவாக ரூபா 7,612,193 செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் கூட்டிக் காட்டப்பட்டிருந்தது.	நிதிக்கூற்றின் குறிப்பு 19 சீராக்கப்பட வேண்டும். இவ் இலக்க வேறுபாட்டினால் ஏற்பட்டதொன்றாவதுடன் இலாப நட்டத்திற்கோ காசுப்பாய்ச்சல் கூற்றிற்கோ எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்த மாட்டாது.	ஊழியர் பணிக்கொடை ஏற்பாடுகளும் காசுக் கொடுப்பனவுகளும் சரியாக காசுப்பாய்ச்சல் கூற்றில் சீராக்கப்பட வேண்டும்.

(இ)	விற்பனைக்குப் பின்னரான சேவை மற்றும் மீன் ஒன்றுதிரட்டும் உபகரண (FAD Buoy) ஏற்பாடுகளுக்காக ரூபா 20,411,373 கூட்டுத்தொகை காசுப் பாய்ச்சல் கூற்றின் வரிக்கு முன்னரான தேறிய இலாபத்தில் சீராக்கப்பட்டிராததன் காரணமாக, காசுப்பாய்ச்சல் கூற்றின் செயற்பாட்டு நடவடிக்கை களிலிருந்து உருவான தேறிய காசுப்பாய்ச்சல் அதே தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. மேலும், முன்னைய ஆண்டுகளின் ரூபா 12,479,701 பெறுமதியான பிழைகள் சீராக்கம் செய்யப் பட்டமை காசுப் பாய்ச்சலில் சீராக்க முடியாதிருந்த போதிலும் இது காசுப் பாய்ச்சல் கூற்றின் வரிக்கு முன்னரான தேறிய இலாபத்திலிருந்து குறைத்துக் காட்டப்பட்டிருந்தமையால் தொழிற்படு மூலதனச் சீராக்கங்களுக்கு முன்னரான செயற்பாட்டு இலாபம் அதே தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.	விற்பனைக்குப் பின்னரான சேவை ஏற்பாடுகள் மற்றும் (FAD) மிதவை ஏற்பாடுகளை காசுப்பாய்ச்சல் கூற்றின் வரிக்கு முன்னரான தேறிய இலாபத்தில் சீராக்கப்படுவதற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. முன்னைய ஆண்டுகளின் திருத்தங்களை காசுப்பாய்ச்சல் கூற்றில் சீராக்கம் செய்யாதிருப்பதற்கு அறிவுறுத்தப்பட்டது.	விற்பனைக்குப் பின்னரான ஏற்பாடுகள் சரியாக காசுப்பாய்ச்சல் கூற்றில் சீராக்கப்பட வேண்டும். கடந்த ஆண்டுகளுக்குரிய சீராக்கங்கள் காசுப் பாய்ச்சல் கூற்றில் சீராக்கம் செய்யப்படலாகாது.
(ஈ)	மீளாய்வாண்டிற்குரிய குத்தகை வருமானமான ரூபா 24,511,291 வரிக்கு முன்னரான தேறிய இலாபத்திலிருந்து குறைத்துக் காட்டப்பட்டிருக்க வேண்டிய போதிலும் அவ்வாறு சீராக்கப் பட்டிராமையால் தொழிற்படு மூலதனச் சீராக்கங்களுக்கு முன்னரான செயற்பாட்டு இலாபம் ரூபா 24,511,291 இனால் அதிகரித்துக்காட்டப்பட்டிருந்தது. மேலும் ஆண்டின் குத்தகை வருமானமாக காசாகப் பெற்ற தொகை ரூபா 23,266,774 முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ் ரூபா 24,511,291 ஆகக் காட்டப்பட்டிருந்ததன் காரணமாக முதலீட்டு நடவடிக்கைகள் மூலம் உருவான காசுப்பாய்ச்சல் ரூபா 1,244,517 இனால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.	ஆண்டின் குத்தகை வருமானத்தைச் சரியாகச் சீராக்கி குத்தகையாகப் பெற்ற உண்மையான தொகை 2025 நிதிக்கூற்றுக் களில் சீராக்கப்படுவதற்கு அறிவுறுத்தப்பட்டது.	ஆண்டிற்குரிய குத்தகை வருமானமும் காசாகப் பெற்ற குத்தகை வருமானமும் சரியாக காசுப்பாய்ச்சல் கூற்றில் சீராக்கப்பட வேண்டும்.
(உ)	இருப்புகளை கிரயம் அல்லது தேறிய கைக்கெட்டும் பெறுமதி யில் குறைந்த பெறுமதியின் அடிப்படையில் மன்றம், கணக்கு வைப்பதாகக் குறிப்பு 2.2.1 இன் கீழ் வெளிப்படுத்தியிருந்த போதிலும், 2024 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான வர்த்தக	2025 ஆம் ஆண்டில் மறுமதிப்பீட்டிற்காக திருத்துவதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.	இருப்பானது நியமத்தின் பிரகாரம், கிரயம் அல்லது தேறிய கைக்கெட்டும் பெறுமதி ஆகிய இரண்டில் குறைந்த பெறுமதியின் அடிப்படையில்

	இருப்பில் உள்ளடங்கிய இரண்டு படகுகளின் சந்தைப் பெறுமதியினதும் கிரயத்தினதும் கூட்டுத்தொகை ரூபா 642,161 ஆக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்ததன் காரணமாக மன்றத்தின் மீளாய்வாண்டின் இலாபம் ரூபா 450,000 இனால் அதிகரித்துக்காட்டப்பட்டிருந்தது.		அடையாளம் காணப்பட வேண்டும்.
(ஊ)	அடையாளம் காணப்படாத பெறுவனவுகள் அடுத்துவரும் மாதத்தில் அடையாளம் காணப்பட்டு திருத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், அரச வங்கியொன்றின் நடைமுறைக் கணக்கிற்குரிய 2024 திசெம்பர் மாத வங்கிக் கணக்கிணக்கக் கூற்றின் படி ரூபா 3,659,354 கூட்டுத்தொகையான 2018 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரை அடையாளம் காணப்படாத பெறுவனவுகள் காணப்பட்டதுடன் கணக்காய்வுத் திகதியான 2025 நவம்பர் 07 ஆம் திகதி வரையிலும் சீராக்கப்பட்டு கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	2018 முதல் 2024 வரை அடையாளம் காணப்படாத பெறுவனவுகளாகக் காட்டப் படும் வைப்புகள் எவ்வித அடையாளமும் உறுதிப் படுத்தப்படாமல் எமது கணக்கிற்கு நேரடியாக வைப்பிலிடப்பட்ட பணமாகும். எமது நிறுவனத்தின் வருமானமாக அல்லது பெறுவனவாக அடையாளம் காண்பதற்கு எவ்வித சான்றுகளும் இன்மையால் இப் பெறுவனவுகள் தொடர்ந்து வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் காட்டப்பட்டுள்ளன.	அனைத்துப் பெறுவனவுகளையும் சரியாக அடையாளம் காணக்கூடிய வகையில் பெறுவனவு நடைமுறை அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.

1.5.3 கணக்காய்விற்கான எழுத்துமூலச் சான்றுகள் இன்மை

	விடயம்	தொகை ரூபா	வழங்கப்படாத கணக்காய்வுச் சான்றுகள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	ஏனைய பெறவேண்டியவை	206,703	உறுதிப்படுத்தல் ஆவணங்கள், நிலுவை உறுதிப்படுத்தல்கள்	இம் மீதி 2010.07.07 ஆம் திகதி பற்றுச்சீட்டு இல. 12922 இன் கீழ் 102863 ஆகவும் 2010.11.10 அன்று பற்றுச்சீட்டு இல. 13230 இன் கீழ் 103824 ஆகவும் கணக்கீட்டு முறைமையில் காட்டப்பட்டுள்ளது. ஒதுக்கீடு ஒன்றை மேற்கொள்வதற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.	தேவையான ஆவணங்களும் மீதிகளின் உறுதிப்படுத்தல்களும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
(ஆ)	அரச நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் மற்றும் தனிநபர் கடன்பட்டோர் மீதிகள்	85,024,104	மீதி உறுதிப் படுத்தும் ஆவணங்கள், மீதி உறுதிப்படுத்தல்கள்	2025 ஆம் ஆண்டின் கடன்பட்டோர் மீதிகளைப் பெற்றுத் துல்லியத் தன்மையை உறுதிசெய்து பணிப்பாளர் சபைக்கு அனுப்பி ஒதுக்கீடு செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.	மேற்படி

(இ)	பொருள் முன்பணங்கள் மற்றும் ஏனைய பெறவேண்டியவை	1,990,047	உறுதிப்படுத்தல் ஆவணங்கள், மீதி உறுதிப் படுத்தல்கள்	இம் மீதி 15 வருடங்கள் பழமையானது. பணிப்பாளர் சபைக்கு அனுப்பி ஒதுக்கீடு செய்வதற்காக அறிவுறுத்தப்பட்டுள்ளது.	தேவையான ஆவணங்களும் மீதி உறுதிப்படுத்தல் களும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
(ஈ)	பல்வேறு நிறுவனங்களில் வைப்பிலிடப்பட்டுள்ள மீளப் பெறவேண்டிய வைப்பு மீதி	616,133	உறுதிப்படுத்தும் மூல ஆவணங்கள்	மின்சார சபைக்கு ரூபா 281,612 மீளச் செலுத்தும் வைப்பாக வைக்கப்பட்டுள்ளது. NAQDA நிறுவனத்திடமிருந்து ரூபா 200,000 தொகை 68215 வவுச்சரில் இணைக்கப்பட்டுள்ளது..	பெறவேண்டிய பழைய மீதிகளைப் மன்றத்திற்கு மீளப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

1.6.1 பெறவேண்டிய பணம்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2024 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு ரூபா 85,024,104 ஆகக் காணப்பட்ட கடன்பட்டோர் மீதியில் 2002 முதல் 2017 வரையான காலப்பகுதியிலிருந்து நிலவிவரும் ரூபா 30,049,547 பெறுமதியான கடன்பட்டோர் மீதி காணப்பட்டதுடன், அது மொத்தக் கடன்பட்டோர் மீதியில் 35 சதவீதமாகும். அக்கடன்பட்டோர் மீதியில் வெளிவாரி கடன்பட்டோருக்கு மேலதிகமாக ரூபா 7,816,786 பெறுமதியான அரச நிறுவனங்களின் கடன்களும் உள்ளடங்கியிருந்த போதிலும் அக்கடன்களை மீளப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.	விற்பனைப் பிரிவினால் கடன்பட்டோர் மீதிக்குரிய நிறுவனங்களிடமிருந்து வசூலிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் அது தோல்வியடைந்துள்ளது. சில மீதிகள் 15 வருடங்களுக்கும் மேல் பழமையான மீதிகள் என்பதால் அது குறித்து அந்நிறுவனங்களில் உரிய ஆவணங்களும் இல்லை. மீண்டும் அந்நிலுவைகள் குறித்து முழுக் கவனத்தையும் செலுத்தி வசூலிப்பதற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.	கடன் மீதிகளைக் காலோசிதமாக வசூலிப்பதற்கும் நிலுவைக் கடன்பட்டோர் மீதியை அறவிடுவது தொடர்பில் முறையான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் செயற்பட வேண்டும்.
(ஆ)	உப ஒப்பந்த அடிப்படையின் கீழ் மீன்பிடி வலைகளை உற்பத்தி செய்வதற்காகத் தனியார் நிறுவனமொன்றிற்கு ரூபா 5,059,049 பெறுமதியான மீன்பிடி வலை உற்பத்திக்குத் தேவையான மூலப்பொருட்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் அதிலிருந்து ரூபா 149,274 பெறுமதியான மீன்பிடி வலைகள் மாத்திரமே மன்றத்திற்குக் கிடைத்திருந்தன.	மீதி உறுதிப்படுத்தல் கடிதங்கள் பதிவுத் தபாலில் அனுப்பப்பட்ட போதிலும் எவ்வித பதிலும் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. 2025 ஆம் ஆண்டிற்குள் ஒதுக்கீடு செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது.	நிலுவையிலுள்ள கடன் மீதிகளை மீளப் பெற்றுக்கொள்வதற்கு முறையான நடைமுறைகளை வகுக்க வேண்டும்.

	எஞ்சிய மூலப்பொருள் பெறுமதியான ரூபா 4,909,775 ஆனது 2011 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை பெறவேண்டியதாக நிதிக்கூற்றுக் களில் காட்டப்பட்டிருந்தது. மீளாய்வாண்டிலும் அம் மீதிகளை வசூலிப்பதற்கோ அல்லது அந்நிறுவனத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கோ செயற்பட்டிருக்கவில்லை.		
(இ)	நிதி நிலைமைக் கூற்றில் 2024 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு ஏனைய முற்பணமாகக் காட்டப்பட்டிருந்த ரூபா 29,088,096 மீதி 2013 ஆம் ஆண்டு முதல் நிலவி வருவதுடன், அந்நிலுவை கணக்காய்வுத் திகதி வரையிலும் மீள அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	பழைய நிலுவைகளுக்காக ஒதுக்கீடு செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது.	முற்பணங்களை மீளப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	கடற்றொழில் அமைச்சின் கீழ் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்ட திக்கோவிட்ட மீன்பிடித் துறைமுகத் திட்டத்திற்குரிய விசேட கட்டுமானப் பணிகள் மன்றத்தினூடாக மேற்கொள்ளப் பட்டிருந்ததுடன், அதற்காக மீன்படி அமைச்சிடமிருந்து கட்டிட வளாகத்திற்காக ரூபா 1,770,766 தொகையும் நில வளாகத்திற்காக ரூபா 1,757,057 தொகையுமாக ரூபா 3,527,823 கூட்டுத்தொகையான பணம் அறவிடப்பட வேண்டியிருந்தது. இந்நிலுவைகள் 2012 முதல் 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரியதாகக் காணப்பட்ட துடன் இம் மீதிகளை அறவிடத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	திக்கோவிட்ட மீன்பிடித் துறைமுகத்தின் பிடிமான வைப்புக் கட்டணமாக உள்ள இம் மீதியை விடுவிக்குமாறு பலமுறை கோரிய போதிலும், 2025 ஆம் ஆண்டில் அத்தகைய தொகையை வழங்க முடியாது என்பதை உறுதிப்படுத்தி ஒரு கடிதம் கடற்றொழில் அமைச்சினால் எமக்கு வழங்கப்பட்டுள்ளது. அதனைப் பணிப்பாளர் சபைக்கு அனுப்பி ஒதுக்கீடு செய்ய அறிவுறுத்தப்பட்டது.	உறுதிப்படுத்தல் ஆவணங்களைச் சமர்ப்பித்து பெறத்தக்க மீதிகளை அறவிட்டுக்கொள்ளவோ அல்லது பெறுவனவு நிச்சயமற்றதாயின் தேவையான சீராக்கங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(உ)	மன்றத்தின் 2024 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றின் படி நோர்த் சீ லிமிட்டட் நிறுவனத்திடமிருந்து ரூபா 9,204,498 தொகையான பெறவேண்டிய மீதி காண்பிக்கப் பட்டிருந்த போதிலும், நோர்த் சீ லிமிட்டட் நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொண்ட நேரடி மீதி உறுதிப்படுத்தலின் படி சீ-நோர் மன்றத்திடமிருந்து 2024 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு பெற வேண்டியதாக ரூபா 2,262,237 மீதி காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அம் மீதிகள் ஒப்பிடப்பட்டு தீர்க்கப்படு வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இந்த நோர்த் சீ நிறுவனத்தின் மீதி 12 வருடங்கள் பழமையான மீதிகளானதுடன் பல சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடாத்தப்பட்ட போதிலும் இம்மீதிகள் குறித்து இறுதி முடிவுகளுக்கு வர முடியவில்லை. எனவே எதிர்காலத்தில் ஒதுக்கீடு செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.	மீதிகளை ஒப்பிட்டு விரைவாக தீர்த்துக்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

1.6.2 செலுத்தவேண்டிய பணம்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(அ)	05 முதல் 14 வருடங்கள் வரையான காலப்பகுதியிலிருந்து நிலவிவரும் ரூபா 1,348,430 பெறுமதியான வர்த்தகக் கடன்கொடுத்தோர் 2024 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.	2025 ஆம் ஆண்டில் மீதி உறுதிப்படுத்தல் கடிதங்களைப் பெற்றுத் துல்லியத்தன்மையை உறுதிசெய்து ஒதுக்கீடு செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது. ’	பழைய கடன்கொடுத்தோர் மீதிகளைத் தீர்ப்பதற்கோ அல்லது கொடுப்பனவுகள் நிச்சயமற்றதாயின் வருமானமாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	ஏனைய செலுத்த வேண்டியவற்றுள் உள்ளடங்கிய ரூபா 60,573,464 ஆன மீளச் செலுத்த வேண்டிய வைப்பு மீதிகளில் 5 வருடங்களுக்கும் மேற்பட்ட காலத்தைக் கடந்த ரூபா 38,634,259 வைப்பு மீதிகள் காணப்பட்டதுடன், அம் மீதிகள் குறித்து ஆராய்ந்து தீர்த்துவைப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	05 வருடங்களுக்கும் மேற்பட்ட பழைய மீதிகளுக்காகக் கோரிக்கைகள் விடுக்கப்பட்டிராததுடன் வைப்பு மீதிகளுக்கான கோரிக்கையின் அடிப்படையில் மாத்திரமே கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுகின்றன.	ஏனைய வைப்பு மீதிகள் குறித்து ஆராய்ந்து தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	ஏனைய செலுத்த வேண்டியவற்றில் உள்ளடங்கிய 2016 ஆம் ஆண்டு முதல் இரு அதிகாரிகளுக்குச் செலுத்த வேண்டியிருந்த ரூபா 412,620 ஆகிய கோரப்படாத பணிக் கொடை (Unclaimed Gratuity) கணக்கின் மீதியும், ரூபா 3,210,163 செலுத்த வேண்டிய பிடித்துவைக்கப்பட்ட (Retention Payable) 13 வருடங்களுக்கும் மேற்பட்ட காலத்திலிருந்து மீதியில் நிலவிவரும் நிறுவனங்களுக்கும் 18 நபர்களுக்கும் செலுத்த வேண்டிய ரூபா 2,938,166 கூட்டுத்தொகையான மீதியும் 5 முதல் 7 வருடங்களுக்கு இடைப்பட்ட காலத்திலிருந்து நிலவிவரும் ரூபா 117,701 மீதியும் காணப்பட்டதுடன், அக்காலாவதியான மீதிகள் குறித்து ஆராய்ந்து தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	பணிகள் பூர்த்தியான போதிலும் இப்பணத்தை விடுவிக்குமாறு கோரிக்கைகள் கிடைக்கப் பெறவில்லை. இம் மீதிகள் பணிப்பாளர் சபைக்கு அனுப்பிவைக்கப்பட்டு வருமானமாக அடையாளம் காண்பதற்கு அறிவுறுத்தப்பட்டது.	பழைய பிடித்துவைக்கப்பட்ட மீதிகள் நீண்ட காலமாக நிலவுவதற்கான காரணங்களை ஆராய்ந்து அதனை தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ஈ)	ஏனைய செலுத்த வேண்டியவற்றில் உள்ளடங்கிய ரூபா 485,333 ஆன கோரப்படாத சம்பளங்களும் ஊதியங்களும் (Unclaimed Salaries & wages) மீதியில், 10 வருடங்களுக்கும் மேலாக தீர்க்கப்படாதிருந்த ரூபா 153,009 ஆன செலுத்தப்படாத சம்பள மீதியும் 5 வருடங்களுக்கும் மேலாக தீர்க்கப்படாத ரூபா 178,145 ஆன செலுத்தப்படாத சம்பள மீதியும் மீளாய்வாண்டி லும் தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இம் மீதிகள் பணியிலிருந்து விலகிச் சென்றவர்களின் மீதிகளானதுடன் செலுத்தப்படாத சம்பளம் தொடர்பாக எந்தவொரு ஊழியரும் கோரிக்கை விடுத்திருக்கவில்லை. இந்நிலுவைகளைப் பணிப்பாளர் சபைக்கு அனுப்பி வருமானமாக அடையாளம் காண்பதற்கு அறிவுறுத்தப்பட்டது.	பழைய மீதிகள் குறித்து ஆராய்ந்து தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் ஆகியவற்றுடன் இணங்காமை

	சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு	இணங்காமை	முகாமைத்துவக் கருத்துரை	பரிந்துரை
(அ)	2021 நவம்பர் 16 ஆம் திகதிய 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையுடன் சமர்ப்பிக்கப்பட்ட செயற்பாட்டு கையேடு			
	(i) பிரிவு 6.3	கம்பனிச் சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட அரச கம்பனிகள் பணிப்பாளர் சபையின் அனுமதியின் பேரில் கடன் பெற வேண்டும் என்ற போதிலும், 2024 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு ரூபா 27,278,779 ஆகவிருந்த வங்கி மேலதிகப் பற்று மீதி தொடர்பில் பெற்றுக்கொள்ளப்பட்ட பணிப்பாளர் சபை அனுமதி கணக்காய்விற்குச் சமர்ப்பித்திக்கவில்லை.	இந்நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்ட ஆரம்பக் கட்டத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட வங்கி மேலதிகப் பற்று மீதியாகும்.	வங்கி மேலதிகப் பற்று தொடர்பாகப் பெற்றுக்கொள் ளப்பட்ட முறையான பணிப்பாளர் சபை அனுமதி கணக்காய்விற் குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(ii)	பிரிவு 6.6	நிதியாண்டு முடிவடைந்து 05 மாதங்களுக்குள் வருடாந்த அறிக்கைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், வரையறுக்கப் பட்ட சீ-நோர் மன்றத்தினால் 2023 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கை இவ்வறிக்கைத் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.	2020 வரை வருடாந்த அறிக்கைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. 2021, 2022 அச்சிடப்பட்டு முடிவடைந்துள்ளன. பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2023, 2024 வரைவுப் பணிகள் முடிவடைந்துள்ளன. அச்சிடுவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.	ஒவ்வொரு நிதியாண்டும் முடிவடைந்து 05 மாதங்களுக்குள் வருடாந்த அறிக்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
(iii)	பிரிவு 6.7	நிலையான சொத்துகள் தொடர்பில் மேற்கொள்ளப் பட்ட வருடாந்த மெய்மையாய்வு அறிக்கைகள் கணக்காய்வுத் திகதியான 2025 நவம்பர் 07 ஆம் திகதி வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.	நிலையான சொத்துகள் மதிப்பீடொன்று இவ்வருடத்திற்குள் மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.	பொருட்கள் மெய்மையாய்வு அறிக்கைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
(ஆ)	2021 நவம்பர் 16 ஆம் திகதிய 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையுடன் சமர்ப்பிக்கப்பட்ட பொது முயற்சிகள் வழிகாட்டலின் வழிகாட்டல் 4.4	அனைத்து அரச நிறுவனங்களும் உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவரை நியமித்திருக்க வேண்டிய போதிலும், மன்றத்தின் உள்ளகக் கணக்காய்வாளர் பதவி கணக்காய்வுத் திகதியான 2025 நவம்பர் 07 ஆம் திகதி வரையிலும் ஒரு வருடத்திற்கும் மேலாக வெற்றிட நிலையில் காணப்பட்டது.	2024 செப்தெம்பர் மாதத்திற்குப் பின்னர் உள்ளகக் கணக்காய்வாளர், பணியிலிருந்து கேட்டு விலகியிருந்ததுடன் கணக்காய்வு உதவியாளராகப் பணியாற்றிய பெண் அதிகாரியும் அதே வருடம் திசெம்பர் மாதம் வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்காகச் சென்றுள்ளார். உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவரை ஆட்சேர்ப்பதற்காக தேவையான அனுமதிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்ட போதிலும் இதுவரை அனுமதி கிடைக்கப் பெறவில்லை.	உள்ளகக் கணக்காய்வாளர் பதவியின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(இ)	கூட்டுத்தாபன அமைப்புப் பத்திரம் 3.3 மற்றும் 3.5 பந்திகள்	மன்றம் அமைக்கப்பட்டதன் நோக்கங்களான ஐஸ் உற்பத்தி, கடல்சார் தயாரிப்புகளைப் பொதியிடுதல், விற்பனை செய்தல் மற்றும் ஏற்றுமதி, மீன்பிடி வலை உற்பத்தி மற்றும் படகு உற்பத்தி மற்றும் விநியோகம் ஆகிய செயற்பாடுகளுக்கு முரணாக, படகு உற்பத்தி, அதிர்ஷ்டலாபக் கூடுகள், வித்து உற்பத்தி செய்வதற்கான பொலித்தீன் இல்லங்களை அமைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.	கூட்டுத்தாபன அமைப்புப் பத்திரத்தில் எமது நிறுவனத்திற்குரிய தனித்துவமான உற்பத்திச் செயற்பாடுகளை நாம் மேற்கொள்வதுடன், நிறுவனத்தின் நிலைத்திருப்பிற்காக காசுப்பாய்ச்சல்களை முறையாகப் பேணுவதற்காகப் பல்வேறு செயற்திட்டங்களைக் கட்டளையிட வேண்டியுள்ளது. ’	கூட்டுத்தாபன அமைப்புப் பத்திரத்தில் காட்டப்பட்டுள்ள நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	கூட்டுத்தாபன விதிமுறைகளின் 53 ஆம் பந்தி	2018 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை பொதுக் கூட்டங்கள் நடத்தப்பட்டிருக்கவில்லை.	மிக விரைவில் வருடாந்த பொதுக் கூட்டத்தை நடத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.	ஒவ்வொரு வருடமும் வருடாந்த பொதுக் கூட்டம் நடத்தப்பட வேண்டும்.
(உ)	கூட்டுத்தாபன விதிமுறைகளின் 58 ஆம் பந்தி	வருடாந்த பொதுக் கூட்டத்தில் பணிப்பாளர் சபை உறுப்பினர்களால் மன்றத்தின் தலைவர் நியமிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு நியமிக்கப்பட்டிருக்கவில்லை.	மிக விரைவில் வருடாந்த பொதுக் கூட்டத்தை நடத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.	வருடாந்த பொதுக் கூட்டத்தில் பணிப்பாளர் சபை உறுப்பினர்களால் மன்றத்தின் தலைவர் நியமிக்கப்பட வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 6,124,428 மிகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டில் ரூபா 3,482,963 மிகையாகக் காணப்பட்டது. அதற்கமைய முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 2,641,465 ஆன விருத்தி அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஏனைய செயற்பாட்டு வருமானங்கள் 115 சதவீதத்தினால் அதாவது ரூபா 48,447,015 இனால் அதிகரித்தமை இவ்வளர்ச்சிக்கு பிரதான காரணியாக அமைந்திருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயற்பாட்டு வினைத்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2023 மற்றும் 2024 ஆகிய வருடங்களுக்காக நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்ட செயற்பாட்டுத் திட்டங்கள், கூட்டுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள உத்தி களுக்கு அமைவாகத் தயாரிக்கப் பட்டிராததுடன் 2023 - 2027 காலப்பகுதிக்குரிய கூட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டு கணக்காய்வுத் திகதியான 2025 நவம்பர் 07 ஆம் திகதி வரையில் இரண்டு வருடங்கள் கடந்திருந்த போதிலும் அதன் இலக்குகளை அடைவதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால் அக்கூட்டுத் திட்டம் வெறும் நடைமுறைக்குச் சாத்தியமற்ற ஒரு ஆவணமாக மாத்திரமேயாகியிருந்தது.	கூட்டுத் திட்டத்தின் படி, 100 சதவீதம் நோக்கங்களை அடைய முடியாது என்பதுடன் ஒரு ஆரம்பமாக அப்பணிகள் தொடங்கப்பட்டிருந்தன.	கூட்டுத் திட்டத்திற்கு இணங்கக்கூடிய வகையில் வருடாந்த செயற்பாட்டுத் திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும்.
(ஆ)	2024 ஆம் ஆண்டின் அங்கீகரிக்கப்பட்ட செயற்பாட்டுத் திட்டத்தின் படி மதிப்பிடப்பட்ட மொத்த விற்பனை வருமானம் ரூபா 341,870,357 ஆகவிருந்ததுடன், அதில் உள்ளடங்கிய செயற்பாடு களில் 14 செயற்பாடுகளுக்குரிய முன்னேற்றம் 0 சதவீதமாகக் காணப்பட்டது. அச் செயற்பாடு களுக்குரிய அடையப்படாத மதிப்பிடப்பட்ட மொத்த விற்பனை வருமானம் ரூபா 245,919,130 அல்லது மதிப்பிடப்பட்ட மொத்த விற்பனை வருமானத்தில் 71.9 சதவீதமாகும்.	எமது செயற்பாட்டுத் திட்டத்தைப் படகுத் தளத்தின் கொள்ளளவை அடிப்படையாகக் கொண்டு வடிவமைப்பதுடன், கட்டளைகள் கிடைக்கும் போது எம்மால் செயற்பாட்டுத் திட்டத்தில் சேர்க்கப்படும் அனைத்து மதிப்பிடப்பட்ட வருமானங்களும் கிடைப்பதில்லை. எனினும், எம்மால் மதிப்பிடப்பட்ட விற்பனைக்கு இணையாக கட்டளைகள் ஏனைய வருமான மூலங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்படுகின்றன.	அடையக்கூடிய வகையில் சரியாக மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	செயற்பாட்டுத் திட்டத்தின் முன்னேற்றத்தின் படி 8 செயற்பாடுகளின் பௌதீக முன்னேற்றம் 33 சதவீதத்திற்கும் குறைவான மட்டத்திலேயே காணப்பட்டதுடன், அச் செயற்பாடுகள் தொடர்பில் அடையப்படாத மதிப்பிடப்பட்ட மொத்த விற்பனை வருமானம் ரூபா 43,905,969 அல்லது 12.8 சதவீதமாகும்.	செயற்பாட்டுத் திட்டத்தின் படி மதிப்பிட்ட போதிலும், அவ்வாறு கட்டளையிடப்பட்ட அளவு களிலேயே பெற்றுக்கொள்ள முடிவதில்லை. அவை குறைந்தோ கூடியோ கிடைக்கும். அம்மதிப்பிடப்பட்ட மொத்த வருமானம் குறைந்த போதிலும், ஏனைய /பைபர் பொருட்களில் இருந்து விற்பனை வருமானத்தை அதிகரித்து நிறுவனத்தின் தொடர் இயக்கத்தை உறுதி செய்ய வேண்டியுள்ளது. 2026 ஆம் ஆண்டிற்குள் செயற்பாட்டுத்	அடையக்கூடிய இலக்குகளை அடையாளம் கண்டு சரியாகத் திட்டங்களைத் தயாரிக்க வேண்டும்.

		திட்டத்தை யதார்த்த பூர்வமாகத் தயாரிப்பதற்கும் மதிப்பிடப்பட்ட வருமானத்தை அடைவதற்கும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.	

3.2 முகாமைத்துவ வினைதிறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டில் நிறுவனத் தினால் அரச வங்கி ஒன்றில் பேணப்பட்டு வந்த கணக்கிற்குரிய மேலதிகப்பற்று வட்டியாக ரூபா 3,728,046 செலுத்தப்பட்டிருந்த துடன், அது நிறுவனத்தின் மொத்தச் செலவினத்தில் 5.4 சதவீதமாகக் காணப்பட்டது.	மீளாய்வாண்டின் வங்கி மேலதிகப்பற்று வட்டி மிக உயர்ந்த மதிப்பை எடுத்திருந்தது. அனைத்து செயற்பாட்டுப் பணிகளும் மேலதிகப்பற்று கணக்கு மூலமே மேற்கொள்ளப் பட்டிருந்ததுடன், இதன் காரணமாக மேலதிகப்பற்று வட்டியாகப் பெருந்தொகை செலுத்த வேண்டியுள்ளது.	மேலதிகப்பற்று ஆகக் குறைந்த மட்டத்தில் இருக்குமாறு நிதி முகாமைத்துவம் செய்யப்பட வேண்டும்.
(ஆ)	மன்றத்தால் தனியார் நிறுவனமொன்றிற்கு உப ஒப்பந்த அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த இரண்டு படகுகளின் கட்டளைகளுக்காக ரூபா 31,931,782 தொகை 2017 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதியிலும் அப் படகுகள் இரண்டினதும் பணிகள் பூர்த்தியாகி கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்திற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இதன் மேற்பார்வைப் பணிகள் எமக்கு வழங்கப்பட்டுள்ளதுடன், நாம் இதனை மிக விரைவாக முடித்து கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்திடம் ஒப்படைக்குமாறு எச்சரித்தும் அறிவுறுத்தல்களையும் வழங்கியிருந்தோம். தற்போது ஒரு படகின் தயாரிப்புப் பணிகள் பூர்த்தியாகி கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.	எஞ்சிய படகின் தயாரிப்புப் பணிகளையும் முடித்து ஒப்படைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(இ)	காரைநகர் படகுத் தளம் சூரியக் கலப் படகு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பணிகளுக்காகத் தனியார் நிறுவனமொன்றிற்கு 2023 மே 10 ஆம் திகதி முதல் 06 மாத காலப்பகுதிக்கு ரூபா 300,000 மாதாந்த குத்தகைத் தொகைக்கு வழங்கப் பட்டிருந்தது. அந்நிறுவனத்திடம் இருந்து ரூபா 699,625 நிலுவைக் குத்தகைத் தொகையை வசூலிக்கக் கணக்காய்வுத் திகதி அல்லது 2025 நவம்பர் 07 ஆம் திகதி வரை செயற்பட்டிராததுடன் 2023 நவம்பர் மாதம் 09 ஆம் திகதி உடன்படிக்கை காலாவதியாகியிருந்தது.	காரைநகர் படகுத் தளம் குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த நிறுவனத் தின் நிலுவைத் தொகையான ரூபா 699,625 பணத்தை வசூலிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.	நிலுவைப் பணத்தை விரைவாக வசூலித்துக்கொள்ள வேண்டும்.
(ஈ)	மன்றத்தினால் யாழ்ப்பாணத்திற்கு அனுப்புவதற்காக பூர்த்தி செய்யப்பட்ட ரூபா 3,365,896 பெறுமதியான 24 அடி Ambulance படகை கொள்வனவாளர் நிராகரித்ததன் காரணமாக 2020 ஆம் ஆண்டு முதலே மட்டக்குளி படகுத் தளத்தினுள் தடுத்து வைக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிலும் அதனை ஒப்படைப்பதற்கோ அல்லது வேறு தரப்பினருக்கு விற்பனை செய்வதற்கோ அல்லது குறித்த கொள்வனவாளருக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கோ செயற்பட்டிருக்க வில்லை.	24 அடி Ambulance படகை மீண்டும் விற்பனை செய்வதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.	மீண்டும் விற்பனை செய்வதற்கும் கொள்வனவாளருக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கும் செயற்பட வேண்டும்.
(உ)	முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பமற்ற) 02 பதவிகளுக்காகக் கிடைத்திருந்த விண்ணப்பங்களில் தகுதியுடைய 50 விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டிருந்தனர். நேர்முகப் பரீட்சையில் 23 விண்ணப்பதாரர்கள் கலந்து கொண்டிருந்ததுடன், பெற்ற புள்ளிகளின் படி அதிகூடிய சம புள்ளிகளைப் பெற்ற இரு விண்ணப்பதாரர்கள் இருக்கை யில், அவர்களுள் ஒருவர் மாத்திரமே ஒரு பதவிக்காகத் தெரிவு செய்யப்பட்டிருந்தார். ஏனைய பதவிக்காக அதிக புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரர்கள்	2012.07.13 அன்று அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு இணங்க, முகாமைத்துவ உதவியாளர் பதவிக்கான ஆட்சேர்ப்பு நடைமுறையின் படி புதிய ஆட்சேர்ப்பொன்று இடம்பெறும் சந்தர்ப்பத்தில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து ஆட்சேர்க்க எதிர்பார்க்கப்படும் பதவிகளுக்கான அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அவ் அனுமதி பெற்றுக் கொள்ளப்பட்ட பின்னர் பத்திரிகை விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட வேண்டும். நிறுவனத்தின் தேவைக்கேற்ப அனைத்து ஆட்சேர்ப்புகளும்	ஆட்சேர்ப்புகள் எப்போதுமே வெளிப்படைத் தன்மையுடனும் ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு அமைவாகவும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

	இருக்கையில் புள்ளிகளின் வரிசைப்படி 16 ஆவதாக இருந்தவர் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.	அன்றைய தலைவரினதும் பணிப்பாளர் சபையினதும் அறிவுறுத்தலுடனும் அனுமதியுடனும் முகாமைத்துவ உதவியாளர் பதவிகளுக்காக ஆட்சேர்ப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.	
(ஊ)	‘‘முகாமைத்துவ” சேவை வகையின் பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு நடைமுறையின் 5.4 பந்தியின் பிரகாரம், ”சேவை வகையின் தரம் II இற்கு உள்ளக விண்ணப்பதாரர்களை ஆட்சேர்க்கும் தகுதிகள்” என்பதன் கீழ், உள்ளக விண்ணப்பதாரர்கள் இளநிலை முகாமைத்துவ சேவை வகையின் தொடர்புடைய துறையில் தரம் I இல் 05 வருட காலமாக திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவ (தரம் II) பதவிக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டிருந்த பெண் அதிகாரி, கனிஷ்ட முகாமைத்துவ சேவை வகையின் தொடர்புடைய துறையில் தரம் I பதவியில் ஒரு வருடமும் ஒரு மாதம் மாத்திரமே மற்றும் குறித்த தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவப் பதவியில் 07 மாத காலம் பதில் கடமைகளை மாத்திரமே ஆற்றியிருந்தார்.	இப்பதவிக்காக முறையான நடைமுறைக்கு அமைவாக ஆட்சேர்ப்பு இடம்பெறவில்லை என்பதும், ஆட்சேர்ப்பு நடைமுறையின் படி புதிய ஆட்சேர்ப்பொன்றை மேற்கொள்வதாயின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் அனுமதி பெற வேண்டியுள்ளது. MM1-1 தரத்திற்காக ஆட்சேர்க்கும் போது இருக்க வேண்டிய ஆகக்குறைந்த தகுதிகள், தொடர்புடைய துறை சார்ந்த பட்டத்தைப் பெற்று 03 வருட அனுபவத்தை விண்ணப்பதாரர் கள் பூர்த்தி செய்திருக்க வேண்டும். எனினும், குறித்த தகுதி பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. ஆட்சேர்ப்பு நடைமுறையின் படி, உள்ளக உயர்வொன்றை வழங்குவதாயின் கனிஷ்ட முகாமைத்துவப் பதவியில் 05 வருட காலத்தைப் பூர்த்தி செய்திருக்க வேண்டியமையால் உள்ளக உயர்வொன்றை வழங்குவதற்குப் போதுமான தகுதிகளும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. அன்றைய தலைவரினதும் பணிப்பாளர் சபையின் அறிவுறுத்தலினதும் அனுமதி யுடன் தகவல் தொழில்நுட்ப முகாமையாளர் பதவி வழங்கப்பட்டுள்ளது.	ஆட்சேர்ப்பு நடைமுறை யின் படி முறையான தகுதிகளைக் கொண்ட நபர்களைப் பதவிகளுக்காக ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(எ)	அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் கோப்பில் உள்ளடக்கப்படாத தலைவர் அலுவலகத்தின் செயலாளர் பதவிக்காக, முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் எவ்வித அனுமதியுமின்றி 2024 மார்ச் 25 ஆம் திகதி பெண் அதிகாரியொருவர் ஆட்சேர்க்கப்பட்டு 2025 நவம்பர் 07 ஆம் திகதி வரையிலும் ரூபா 1,291,250 கூட்டுத்தொகையான	2023.11.24 அன்று நடத்தப்பட்ட பணிப்பாளர் சபையின் பெரும்பான்மை அனுமதியுடன் இப்பதவி தலைவர் அலுவலகத்திற்குத் தேவையான பதவியொன்றாக ஆட்சேர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்ட போதிலும், நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் கோப்பில் இல்லாத	தொடர்புடைய நிறுவனங்களின் அனுமதியைப் பெற்றுக்கொண்ட பின்னர் ஆட்சேர்ப்புகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	தொகை சம்பளமாகச் செலுத்தப்பட்டிருந்தது.	பதவியென்பதால் உரிய ஆட்சேர்ப்பு நடைமுறையை மேற்கொள்ள முடியாமல் போயிற்று. இப்பதவிக்குரிய ரூபா 75,000 மாதாந்த சம்பளம் பணிப்பாளர் சபையின் அனுமதியுடன் வழங்கப்பட்டுள்ளது.	
(ஏ)	ஆட்சேர்ப்பு நடைமுறையின் படி முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்ப - சேவை வகைக்கு ஆட்சேர்க்கும் தகுதிகளின் (ஆ) இன் கீழ், கல்விப் பொதுத் தராதர (உயர்தர) பரீட்சையில் அனைத்துப் பாடங்களிலும் சித்தியடைந்திருக்க வேண்டும் எனத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்ப) - வடிவமைப்பு கலைஞர் பதவிக்காக மீளாய்வாண்டில் ஆட்சேர்க்கப்பட்டிருந்த பெண் அதிகாரி, 2020 ஆம் ஆண்டில் கணிதப் பிரிவில் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி 03 பாடங்களில் ஒரு பாடத்தில் மாத்திரமே சித்தியடைந்திருந்தார்.	இப்பதவிக்காக ஆட்சேர்க்கப் பட்டவர் ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு அமைவாகத் தகுதிகளைப் பூர்த்தி செய்திருக்கவில்லை. தலைவரினதும் பொது முகாமையாளரினதும் அறிவுறுத்தலின் படி இவ் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தது. இவ் ஒப்பந்த நியமனங்களுக்காக இதுவரை பிரதமரின் அலுவலகத்தின் அனுமதி கிடைக்கப் பெற்றிராததுடன் அனுமதி கிடைக்கப்பெற்றதும் ஒப்பந்தக் காலத்தை நீடிக்கையில் ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு அமைவாகத் தகுதிகளைப் பரிசீலித்துப் பார்த்து உரிய நியமனத்தை வழங்க நடவடிக்கை எடுப்பேன்.	ஆட்சேர்ப்பு நடைமுறையின் படி உரிய தகுதிகளைப் பூர்த்தி செய்யும் அதிகாரிகளை மாத்திரமே ஆட்சேர்ப்பதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஐ)	கணக்காய்வுத் திகதியான 2025 நவம்பர் 07 ஆம் திகதி வரையில், 03 உயர்மட்ட முகாமைத்துவ தரப் பதவிகளுக்குப் பொருத்தமாக 02 வெற்றிடங்களும், 11 நடுத்தர முகாமைத்துவ தரப் பதவிகளுக்குப் பொருத்தமாக 09 வெற்றிடங்களும், 09 கனிஷ்ட முகாமைத்துவ தரப் பதவிகளுக்குப் பொருத்தமாக 08 வெற்றிடங்களும் காணப்பட்டன. 43 முகாமைத்துவ உதவியாளர் பதவிகளுக்குப் பொருத்தமாக 16 வெற்றிடங்களும், ஆரம்ப மட்டப் பதவிகள் 69 இற்குப் பொருத்தமாக 33 வெற்றிடங்களும் காணப் படுவதால் மன்றத்தின் அன்றாட வர்த்தக மற்றும் செயற்பாட்டுப் பணிகளை மேற்கொண்டு வெற்றிடங்களை நிரப்புவதற்கோ அல்லது திருத்துவதற்கோ செயற்பட்டிருக்கவில்லை.	இவ் வெற்றிடமாக உள்ள பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு களை மேற்கொள்வதற்கான அனுமதிக்காகப் பிரதமரின் அலுவலகத்திற்கு அனுப்பப் பட்டுள்ளதுடன், அனுமதி கிடைத்ததை அடுத்து ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு அமைவாகத் தகுதிகளைப் பரிசீலித்துப் பார்த்து உரிய வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுப்பேன். ,	ஆட்சேர்ப்பு நடைமுறை யின் படி உரிய தகுதிகளைக் கொண்ட நபர்களை விரைவாக ஆட்சேர்த்து வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ஒ)	நடுத்தர முகாமைத்துவ மட்டத்திற்குரிய வேலைத்தள முகாமையாளர், படகுத்தள முகாமையாளர் ஆகிய பதவிகள் மற்றும் கனிஷ்ட முகாமைத்துவ மட்டத்திற்குரிய நிர்வாக அதிகாரி, விற்பனை அதிகாரி, கணக்கு அதிகாரி, உற்பத்தி அதிகாரி, தரக்கட்டுப்பாட்டு அதிகாரி மற்றும் விநியோக அதிகாரி ஆகிய பதவிகளுக்குப் பொருத்தமாக கீழ்மட்ட அதிகாரிகள் பதில் கடமையாற்றுவதையும் விற்பனை முகாமையாளர் பதவிக்கு ஒரு ஒப்பந்த ஊழியர் இருப்பதையும் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. நடுத்தர மற்றும் கனிஷ்ட முகாமைத்துவ மட்டப் பதவிகள் பெருமளவில் வெற்றிடமாகக் காணப்படுவதும் கீழ்மட்ட அதிகாரிகள் 02 வருடங்களுக்கும் மேற்பட்ட காலமாக பதில் கடமையாற்றுவதன் காரணமாக அவர்களின் நிரந்தர பதவிகளின் பணிகளையும் மேற்கொள்ள முடியாமல் போவதால், அது நிறுவனத்தின் நோக்கங்களை அடைந்துகொள்வதிலும் செயலாற்றுகையிலும் பாதகமான தாக்கங்களை ஏற்படுத்தும் என கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.	பதில் கடமையாற்றும் பதவிகள் அனைத்திற்கும் அத்துறைகள் குறித்து மிகவும் அனுபவமிக்க அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிறுவனத்தின் நிதி ஸ்திரத்தன்மை இல்லாததன் காரணமாக நிரந்தர பதவிகளுக்கான ஆட்சேர்ப்புகளை மேற்கொண்டு சம்பளம் வழங்க முடியாத நிலைமையினால், கொடுப்பனவொன்றை மாத்திரம் வழங்கி அப்பதவிகளின் கடமைப் பொறுப்புகள் உள்ளடக்கப்படுகின்றன. இப் பதவிகளுக்குத் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள அதிகாரிகளுக்கு ஆட்சேர்ப்பு நடைமுறையின் படி உள்ளக நேர்முகப் பரீட்சையொன்றை நடத்தி நிரந்தர பதவிகளை வழங்குவதற்குப் பணிப்பாளர் சபை அனுமதி கிடைத்துள்ளது. அப்பதவிகள் ஆட்சேர்க்கப்பட்ட பின்னர் வெற்றிடமான பதவிகளுக்குத் தேவைக்கேற்ப ஆட்சேர்க்க நடவடிக்கை எடுப்பேன்.	ஆட்சேர்ப்பு நடைமுறையின் படி உரிய தகுதிகளைக் கொண்ட நபர்களை விரைவாக ஆட்சேர்த்து வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும்.